DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.2 MADURANTAKAM

Calender : CC 64/2025

Miscellaneous :

Sessions : PW 7

Deposition of Witness for

**எதிரி ஆஜர்**

| | |
|---|---|
| Name | மாரிமுத்து |
| Father / Husband Name | ராதாகிருஷ்ணன் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 25.09.**2025**

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது கீழாமூரில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். கடந்த 20.06.2024 ம் தேதி எங்கள் ஊரை சேர்ந்த சுந்தரம் மற்றும் அவரது மனைவி டில்லிராணி ஆகியோர் சென்னையில் இருந்து மேல்மருவத்தூருக்கு ரயிலில் வந்து பின்னர் அங்கு இருந்து பார்க்கிங் செய்யப்பட்ட இருசக்கர வாகனத்தில் எங்கள் ஊருக்கு வந்துகொண்டிருந்தபோது உத்திரமேரூர் சாலையில் உள்ள நாகாத்தமன் கோவில் அருகே வெள்ளை நிற பேட்டரி கார் அவர்கள் மீது மோதி விபத்து ஏற்பட்டதாக தகவல் தெரிந்து சம்பவயிடம் வந்தேன். மேற்படி விபத்தில் இருவருக்கும் தலையில் பலத்த காயம் ஏற்பட்டு மேல்மருவத்தூர் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்கள். டில்லி ராணி என்பவர் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். சுந்தரம் மேல் சிகிச்சைக்காக செங்கல்பட்டு அரசு மருத்துவமனைக்கு அழைத்து செல்லப்பட்டார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

**2.** சம்பவத்தை குறித்து நேரடியாக தெரியாது என்றால் சரிதான். இறந்தவர் எனது ஊர்காரர் ஆவார். ஆஜர் எதிரிதான் விபத்து ஏற்படுத்திய வாகனத்தை ஓட்டிய நபர் ஆவார். இறந்தவர் எனது ஊர்காரர் என்பதால் அவருக்கு இழப்பீடு பெற வேண்டி அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.